# முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**C.O.S.No. 16/2022**

திரு. அழகர்சாமி (P.W– 1 ) **28.06.2023.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 2014 ஆம் ஆண்டு முதல் ராம் ஸ்ரீ இம்பெக்ஸ் நிறுவனத்தை நடத்தி வருகிறேன். ராம் ஸ்ரீ இம்பெக்ஸ் நிறுவனத்திற்கு உத்யேக ஆதார் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். என் நிறுவனத்தின் ஆண்டு மொத்த பரிவர்த்தனை ரூ. 4 கோடி இருக்கும். என் வரவு செலவுகளை பார்ப்பதற்கு கணக்காளர் இருக்கிறார். நானும் பார்ப்பேன். என் நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை பார்க்கவில்லை என்றாலும் என் வேலையாட்கள் தான் கணக்கு வழக்குகளை பார்ப்பார்கள் என்றாலும் சரிதான். நான் சரிபார்த்து கையொப்பம் செய்வேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு இந்திய சாட்சிய சட்டம் 65 பி–ன் படியான சான்று வழங்கப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த முதல் விசாரணை Commercial suit Act படி தாக்கல் செய்யாததால் அந்த முதல் விசாரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கணக்கு வழக்குகளை நான் பார்க்காததால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படி எனக்கு சாட்சியம் அளிக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 2018–2019 ஆம் ஆண்டுகளில் என்னுடைய நிறுவன கணக்குகளை இந்துமதி என்பவர் பார்த்து வந்தார். தற்போதும் இந்துமதி எங்கள் நிறுவனத்தில் பணிபுரிகிறார். 2018–2019, 2019 –2020 ஆகிய ஆண்டுகளுக்கான எங்கள் நிறுவனத்தின் கணக்கு வழக்குகளின் வருமான வரி செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அதன் விவரங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். பிரதிவாதி நிறுவனம் எங்களுடன் 2018 டிசம்பர் முதல் வியாபார தொடர்பை வைத்துள்ளார்கள். நான் துணிகளை கடனாக வழங்கும் போது அந்த நிறுவனத்தின் அனைத்து விவரங்களை தெரிந்துதான் கடன் கொடுப்போம் என்றால் சரிதான். 2018 ஆம் வருடம் பிரதிவாதி நிறுவனத்தின் உரிமையாளர் தீரன்

ரத்தோர் என்பவர் இருந்தார். வியாபாரத் தொடர்பு கொள்ளும் போது பிரதிவாதி நிறுவனத்தின் சார்பாக யார் கலந்து கொள்வார்கள் என்று எழுத்து மூலமாக எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. ஆனால் அனைத்து வியாபாரத் தொடர்பும் இமெயில் மூலமாகத்தான் நடந்தது. முதன்முதலில் பிரதிவாதி நிறுவனத்தின் சார்பாக ரவிக்குமர் என்பவர்தான் எங்கள் நிறுவனத்துடன் தொடர்பில் இருந்தார். பிரதிவாதி நிறுவனம் தனி நபர் நிறுவனத்தில் இருந்து பிரைவேட் லிமிடெட் ஆக மாறிய பிறகு அது சம்மந்தமாக பிரதிவாதி நிறுவனத்தில் இருந்து எங்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. பிரதிவாதி நிறுவனம் பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாறியதற்கு எனக்கு தனிப்பட்ட முறையில் பிரதிவாதி நிறுவனத்தில் எந்த வித அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றாலும் எனக்கும் ரவிக்குமாருக்கும் உள்ள தொடர்பின் மூலம் தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு MSME Counsel ல் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரையோ , புகார் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் குறித்தோ நான் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி மனு MSME Counsel சட்டத்திற்கு உட்பட்டு விரவில்லை என்பதால் தான் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த மனு, ஆவணங்கள் மற்றும் உத்தரவினை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யமுடியும். பிரதிவாதி நிறுவனத்திற்கு சரக்குகளை நான் MML Logistics மூலம் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனம் கேட்டுக்கொண்டதற்காக அதன் மூலம் அனுப்பிவைத்தேன். பிரதிவாதி குறிப்பிட்டு MML Logistics மூலம் சரக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்றாலும் என்னுடைய வசதிக்காகத்தான் MML Logistics மூலம் அனுப்பினேன் என்றாலும் சரியல்ல. 25.03.2019 ஆம் தேதி மேற்படி ரவிக்குமார் மீது பிரதிவாதி நிறுவனம் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்த விவரம் எனக்குத் தெரியவந்தது. அது சம்மந்தமாக பெங்களூர் காவல் துறை என்னையும் MML Logistics நிறுவனத்தையும் சாட்சியாக இருக்க வேண்டும் என்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. பெங்களூர் போலீசார் என்னை சாட்சியாக விசாரித்தார்கள் என்றாலும் ஆனால் வழக்கிற்காக விசாரிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. 2019 பிப்ரவரி மற்றும் மார்ச் கால கட்டத்தில் மேற்படி புகார் சம்மந்தமாக பிரதிவாதி நிறுவனம் செயல்படாமல் இருந்தது என்றும் அந்த காலகட்டத்தில் எங்கள் நிறுவனம் அனுப்பியதாக சொல்லப்படும் பொருட்கள் எதுவும்

பிரதிவாதி நிறுவனத்தால் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் தயாரிக்கப்பட்ட இன்வாய்ஸ் எல்லாம் ரவிக்குமார் நானும் கூட்டாக சேர்ந்து பொய்யாக தயாரித்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனம் மொத்தமாக கொடுக்கவேண்டிய தொகை ரூ. 4,194/– மட்டுந்தான் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் பிரதிவாதி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் என்பதை தெரிந்து தான் வழக்கு தாக்கல் செய்தேன். ஆகையால் ஜிந்தால் தீரன் ரத்தோரை ஒரு தரப்பினராக சேர்க்காததால் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நானும். ரவிக்குமார் என்பவரும் கூட்டுச்சேர்ந்து வழக்கு ஆவணங்களை பொய்யாக தயாரித்துள்ளதால் வழக்குத்தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

P CHELLADURAI Digitally signed by P CHELLADURAI Date: 2023.06.28 17:33:19 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

திருப்பூர்.